Kanchipuram Dt

A

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## பன்னிரெண்டாம் வகுப்பு

## வரலாறு

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

I. குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்றுவிடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 20×1=20

1. "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" எனக் கூறியவர்.
   அ) பாலகங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி
   இ) சுபாஷ் சந்திரபோஸ் ஈ) பாரதியார்
2. கல்கத்தாவில் அனுசிலன் சமிதியை நிறுவியவர்
   அ) புலின் பிஹாரி தாஸ்
   ஆ) ஹேமசந்திர கானுங்கோ
   இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார்கோஷ்
   ஈ) குதிரம் போஷ் மற்றும் பிரஃபுல்லா சாக்கி
3. பனராஸ் இந்துப் பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?
   அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) மதன்மோகன் மாளவியா இ) திலகர் ஈ) பி.பி.வாடியா
4. இந்தியாவின் மூவர்ணக்கொடி எப்போது ஏற்றப்பட்டது?
   அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 12, 1930 இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 26, 1931
5. பின்வரும் நிகழ்வுகளைச் சரியான கால வரிசைப்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.
   i) கேதா சத்தியாகிரகம் ii) சம்பரான் இயக்கம்
   iii) பிராமணரல்லாதார் இயக்கம் iv) வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்
   அ) ii, iii, i, iv ஆ) iii, ii, i, iv இ) ii, i, iv, iii ஈ) ii, i, iii, iv
6. பின்வரும் கூற்றுகளில் பொருளாதாரப் பெரும் மந்தம் குறித்துச் சரியானவை
   i) இது வட அமெரிக்காவில் ஏற்பட்டது
   ii) வால் தெருவில் ஏற்பட்ட வீழ்ச்சியானது பெரும்மந்தத்தை விரைவுபடுத்தியது
   iii) பெரும் மந்தம் வசதிபடைத்தவர்களை மட்டுமே பாதித்தது
   iv) விலை வீழ்ச்சி அடைந்ததால் பெரும் மந்தத்தின் போது சிறப்பான வாழ்க்கை முறையை தொழிலாளர்கள் அனுபவித்தனர்
   அ) i) மற்றும் ii ஆ) i, ii மற்றும் iii இ) i மற்றும் iv ஈ) i, iii மற்றும் iv
7. முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?
   அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி ஈ) பாரசீகம்
8. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயில் இரகசிய வானொலி நிலையத்தை நடத்தியவர் யார்?
   அ) உஷா மேத்தா ஆ) பீரீத்தி வதேதார் இ) ஆசேப் அலி ஈ) கேப்டன் லட்சுமி
9. பின்வரும் நிகழ்வுகளில் சரியான வரிசையைத் தேர்வு செய்க:
   i) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை ii) நேரடி நடவடிக்கை நாள்
   iii) ஆகஸ்ட் கொடை iv) தனிநபர் சத்யாகிரகம்
   அ) i, ii, iii, iv ஆ) iii, i, ii, iv இ) iii, iv, i, ii ஈ) i, iii, iv, ii
10. அரசமைப்பு நிர்ணயச் சபையில் குறிக்கோள் தீர்மானங்களைக் கொண்டு வந்தவர்
   அ) இராஜேந்திர பிரசாத் ஆ) ஜவகர்லால் நேரு
   இ) வல்லாபாய் படேல் ஈ) மௌலானா அபுல் கலாம் ஆசாத்

11. இந்திய அரசாங்கம் ............ வகையான மேம்பாட்டிற்காக உறுதி பூண்டுள்ளது.
 அ) முதலாளித்துவ ஆ) சமதர்ம இ) தெய்வீக ஈ) தொழிற்சாலை
12. இந்திய சீனப்போர் நடைபெற்ற ஆண்டு
 அ) 1952 ஆ) 1960 இ) 1962 ஈ) 1971
13. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?
 அ) 2005 ஆ) 2006 இ) 2007 ஈ) 2008
14. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எவருடைய வெற்றி பெரிதும் ஊக்கம் தந்தது.
 அ) மார்க்கோ போலோ ஆ) ரோஜர் பேக்கன் இ) கொலம்பஸ் ஈ) பார்தோலோமியோ டயஸ்
15. வட அமெரிக்காவில் முதன் முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள் ................
 அ) போர்த்துகீசியர் ஆ) ஸ்பானியர் இ) டேனியர் ஈ) ஆங்கிலேயர்
16. "இரு உலகங்களின் நாயகன்" என கொண்டாடப்பட்டவர் .............. ஆவார்.
 அ) சார்லஸ் ஆல்பிரட் ஆ) பிஸ்மார்க் இ) மூன்றாம் நெப்போலியன் ஈ) கரிபால்டி
17. கீழ்க்காண்பனவற்றுள் எந்நாடு மையநாடுகள் சக்தியில் அங்கம் வகிக்கவில்லை?
 அ) பல்கேரியா ஆ) ஆஸ்திரிய - ஹங்கேரி இ) துருக்கி ஈ) மாண்டி நீக்ரோ
18. கீழ் பொருத்தப்பட்டிருப்பவையில் சரியான இணைகள் எது?
 1) ஜெனரல் டிகால் - பிரான்ஸ்
 2) ஹேல் செலாஸி - எத்தியோப்பியா
 3) ஜெனரல் படோக்லியோ - ஜப்பான்
 4) அட்மிரல் யாம்மோட்டோ - இத்தாலி
 அ) 1 மற்றும் 2 ஆ) 2 மற்றும் 3 இ) 3 மற்றும் 4 ஈ) அனைத்தும்
19. "பனிப்போர்" என்னும் சொல்லை உருவாக்கியவர்
 அ) பெர்னாட் பரூச் ஆ) ஜார்ஜ் ஆர்வெல் இ) ஜார்ஜ் கென்னன் ஈ) சர்ச்சில்
20. அணிசேரா இயக்கத்தின் முதல் உச்சி மாநாடு ............ ல் நடைபெற்றது.
 அ) பெல்கிரேடு ஆ) பெய்ஜிங் இ) பாண்டுங் ஈ) பாலி

## பகுதி - ஆ

**II. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 7×2=14**

21. புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை ஆய்க.
22. மிதவாத தேசியவாதிகளின் "இறைஞ்சுதல் கொள்கை" (The Medicant Policy) என்றால் என்ன?
23. தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் ஏன் எதிர்க்கப்பட்டது?
24. எத்தகைய சூழ்நிலையில் காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கம் பற்றி சிந்தித்தார்?
25. இணைப்புறுதி ஆவணம் பற்றி நீவிர் அறிவது யாது?
26. பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.
27. வோம்ஸ் சபையின் வெளிப்பாடு என்ன என்று தெரிவிக்கவும்?
28. பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
29. இரவலர் சட்டங்கள் பற்றி விவரமாக எழுதுக.
30. கெல்லாக் - பிரையாண்ட் உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புக.

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 7×3=21

31. மெக்காலேயின் "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை" ஆய்க.
32. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
33. சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?
34. சிம்லா மாநாட்டின் பேச்சுவார்த்தைகள் ஏன் முறிந்தன?
35. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.
36. இந்திய வேளாண்மையின் பின் தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை?
37. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?
38. "செப்டம்பர் படுகொலைகள் எதனால் ஏற்பட்டது?
39. மிக ஆபத்தான U - படகுகள் மற்றும் Q கப்பல்கள் பற்றி நீவிர் அறிந்தது என்ன?
40. இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.

## பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 7×5=35

41. அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக. **(அல்லது)**
ஆ) திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவங்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

42. அ) இந்திய விடுதலைப்போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கிணைப் பற்றி மதிப்பிடுக. **(அல்லது)**
ஆ) 1919 - 1939 ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக.

43. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்பு வாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க. **(அல்லது)**
ஆ) இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.
i) ஜூனாகத் ii) சென்னை iii) ஹைதராபாத் iv) நாக்பூர் v) கல்கத்தா

44. அ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக. **(அல்லது)**
ஆ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக.

45. அ) ஊரக மறுசீரமைப்பு தொடர்பாக இந்திய அரசு பின்பற்றிய நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்துக. **(அல்லது)**
ஆ) பிராட்டஸ்டண்ட் சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள் யாவை? ஜெர்மனியில் மார்ட்டின் லூதர் இந்த இயக்கத்தை எவ்வாறு ஒருங்கிணைத்தார்?

46. அ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள் அதன் போக்கு விளைவுகள் குறித்து விவாதிக்கவும்? **(அல்லது)**
ஆ) ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே என ஏன் சொல்லப்படுகிறது?

47. அ) முதல் உலகப்போரின் காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக. **(அல்லது)**
ஆ) பிரெஞ்சுப்புரட்சியின் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து குறிப்பிடவும்.

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com